Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடிஅரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மலர் 19 } சுபோது 18-5-1946 வைகாசி 5உ { மலர் 32

# கருப்புச்சட்டைப்படை மாநாடு

## 50,000 மக்கள் மைல் ஊர்வலம்

## 20,000 தொண்டர்கள் அணிவகுத்து சென்ற காட்சி

### ஆயிரக்கணக்கான பெண் தொண்டர்களின் வீரமுழக்கம்!

☆

(நமது விசேட நிருபர்)

மே 11, 12 தேதிகளில் திராவிடர் கழக கருப்புச்சட்டைப்படை மாநாடு ஆடம்பரத்தோடும், ஆரவாரத்தோடும், உற்சாகத்தோடும் நடைபெற்ற நடவடிக்கை விபரம்.

10-5-46 காலையிலிருந்தே க. ச. படை தொண்டர்களும், கழகத்தோழர்களும், பிறரும் மாநாட்டிற்காக குடும்பத்தோடு பல ஜில்லாக்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் வந்து குவிந்த வண்ணமிருந்தனர்.

### பந்தல்

மதுரை வைகையாற்றில் பாலத்தின் கீழ்ப்புறத்தில் பிரம்மாண்டமான பந்தல் 200x200 அடி அளவில் போடப்பட்டிருந்தது. இதுவல்லாமல் கடைகளுக்காக சிலவும், பெண்கள் தங்க தனிவிடுதிக்காக ஓர் பெரிய பந்தலும் அமைக்கப்பட்டிருந்தன. மாநாட்டுப் பந்தலின் எதிர்ப்புற தலைப்பில் பெரியார் உருவம் பொறிக்கப்பட்டும் மிகப்பெரிய திராவிடக் கொடி ஒன்று கம்பீரமாக பறந்துகொண்டுமிருந்தது. நகரெங்கும், சாலைகளிலுள்ள உயர மரங்கள்மீதும், கடைகளிலும், வீடுகளிலும் திராவிடர் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. மாநாட்டுப் பந்தலுக்குள் 40x60 அடி அளவில் உயரமான மேடை அமைக்கப்பட்டு தலைவர்கள் அமரும் இடத்திற்குப்பின் இயக்கக்கொடியின் சின்னம் 40x30 அடி அளவு கறுப்புதுணியின் மத்தியில் சிவப்பு வட்டம் பொறிக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. பந்தல் முழுமையும் இயக்க லட்சிய சொற்கள் நிறைந்த அட்டைகள் பந்தல் கால் ஒவ்வொன்றிலும் கட்டப்பட்டிருந்தன, சிறு அளவில் தயாரிக்கப்பட்ட கழகக்கொடி தோரணங்கள் பந்தலை அலங்கரித்தன.

### பெரியார் வருகை

10-5-46 இரவும், 11-5-46 காலை முதல் வண்டியிலும் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், தி. பொ. வேதாசலம், பழயகோட்டை இளையபட்டக்காரர் என். அர்ச்சுனன், க. அன்பழகன், சனார்த்தனம் முதலியோரும் மற்ற பிரதிநிதிகளும் வந்துவிட்டனர். 11-5-46 காலை 8-15 மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டியில், மாநாட்டுத் தலைவர் பெரியார், திறப்பாளர் சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். காந்தி அம்மையார், ஆ. திராவிடமணி முதலியோர் வந்தனர். இரயில்வே பிளாட்பாரத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் நின்று தலைவர்களை வரவேற்றனர். ஸ்டேஷனுக்கு வெளியே மங்கம்மாள் சத்திரத்திற்கு எதிரில் 20000 க. சட்டை தொண்டர்கள் வட்டமாக அணிவகுத்து நின்றனர். தோழர்கள் எம். ஆர். ராதா, பாவலர் பாலசுந்தரம் இருவரும் இராணுவ கறுப்புச்சட்டை உடையில் குதிரைகள் மீது அமர்ந்து அணிவகுப்பை நடத்திக்கொண்டிருந்தனர். தொண்டர்கள் பலர் கழகக்கொடிகளையும், இயக்க லட்சிய சொற்கள் பொறித்த அட்டைகளையும் கையில் கொண்டிருந்தனர். தொண்டர்கள்யாவரும் பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்ற வாழ்த்தொலிகளை முழக்கிக்கொண்டு ஊர்வலம் புறப்பட ஆயத்தமாகி பெரியார் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

### ஊர்வலம்

பெரியார் அவர்கள் வந்தவுடன் ஊர்வலம் ஆரம்பமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இரட்டைக்குதிரை சாரட்டில் தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை, தோழர்கள் பழயகோட்டை இளையபட்டகாரர் என். அர்ச்சுனன், S.R. காந்தி அம்மையார், இரா. நெடுஞ்செழியன் முதலியோர் அமர்ந்திருந்தனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண் தொண்டர்கள் உட்பட 20000 க.ச. தொண்டர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்து நடந்தனர். குதிரைமீது அமர்ந்திருந்த இரு தளபதிகளும் படைவரிசையின் இருபுறமும் சென்றனர். தோழர்கள் சம்பத், அன்பழகன், இளம்வழுதி மற்றும் பலவர் தொண்டர்படைத் தளபதிகள் படைவகுப்பை ஒழுங்குபடுத்தி நடத்திச் சென்றனர். தொண்டர்கள் அணிவகுப்பிற்குப் பின்னால் 20000 மக்களுக்குமேல் சூழ்ந்து ஊர்வலத்தோடு வந்தனர். தொண்டர்களும், பொது மக்களும், பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்ற வெற்றி ஒலிகளை ஊதுகுழாய் மூலம் ஒலித்துச் சென்றனர். வழிநெடுக இடையிடையே ஊர்வலத்தை நிறுத்தி பல தோழர்கள் தலைவர்களுக்கு மாலையணிவித்து மகிழ்ந்தார்கள். பல முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலம் சுமார் 6மைல் தூரத்திற்குமேல் சென்று மாநாட்டுக் கொட்டகையை யடைந்தது.

தெருக்களின் இருபுறமும் மக்கள் ஏராளமாகக் குழுமியிருந்து ஊர்வலம் செல்லும் காட்சியைக்கண்டு களித்தனர். பலர் பின் தொடர்ந்து வர கூட்டம் முன்னிலும் இரு மடங்கு அதிகரித்து விட்டது. ஊர்வலக்காட்சி மாற்றுக் கட்சித் தோழர்கள் மனதைக் கலக்கியது; அவர்கள் கட்டுப்பாட்டையும், உற்சாகத்தையும் கண்டு பொறாமைகொண்டனர். மறுநாள் இவ்வெதிரிகளால் நிகழ்த்தப்பட்ட கலவரத்திற்கும், அட்டூழியத்திற்கும், நாசவேலைக்கும் இப்பொறாமைக்குணமே காரணமென்னலாம். (கலவரத்தின் முழு விவரமும், பெரியார் அறிக்கையும் வேறு இடத்தில் உள்ளன)

ஊர்வலம் வந்து சேருவதற்கு முன்பே பதினாயிரம் மக்களுக்குமேல் பந்தலில் குழுமியிருந்தனர். பந்தலுக்கு உள்ளும் வெளியே நான்குபுறமும் கேட்கும்படி நல்ல முறையில் ஒலிபெருக்கி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; பல தோழர்கள் இயக்கப்பாடல்கள்பாடி மக்களை மகிழ்வித்த வண்ணமிருந்தனர்.

மக்கள் பெரும் ஆரவாரம் செய்யவும், வெற்றி ஒலிகள் இடியோசைபோல் முழங்கவும், தலைவர்கள் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்து மேடையில் அமர்ந்தனர். இசைக்குப்பின் மாநாடு 11 மணிக்கு தொடங்கியது.

பழயகோட்டை இளவல், இளையபட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் வீரவுரையாற்றி கொடியேற்றி வைத்தார்கள். (சொற்பொழிவு பின்னர் வரும்)

தளபதி அண்ணாதுரை அவர்கள் அரிய சொற்பொழிவாற்றி மாநாட்டை திறந்துவைத்தார்கள். பிற கட்சிக்காரர்கள் தொடமுடியாதவை என்று தள்ளப்பட்ட, ஆனால் மக்களுக்கு ஜீவநாடியான சமூகசீர்திருத்த பிரச்சினைகளை நமது சழகம் கவனிக்கிறதென்றும், அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் தொண்டாற்றவே கறுப்புச் சட்டைப்படை யமைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்கள். இதோடு பகல் 1மணிக்கு இடைவேளை உணவிற்காக

மாநாடு கலைந்து 3மணிக்கு தொடங்கியது.

தோழர் பி. செங்குட்டுவன் அவர்கள் தம் வரவேற்புரையை நிகழ்த்தி பெரியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி முன்மொழிந்தார். தோழர் அருப்புக்கோட்டை எஸ். எஸ். பழனிச்சாமி, இரா. நெடுஞ்செழியன், காஞ்சி கலியாணசுந்தரம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, எ. பி. சனார்த்தனம் முதலியோர் ஆதரித்துப் பேசியபின் பெரியார் அவர்கள் மக்களின் பெரும் ஆரவாரத்திக்கிடையே எழுந்து தலைமையுரையை நிகழ்த்தினார்கள். தொண்டர்களின் கடமையை விளக்கி, தலைவரின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கவேண்டிய அவசியத்தைக் குறித்து விளக்கமாகப் பேசி, திராவிடர் கழகத்தின் எதிர்கால வேலையையும், திட்டங்களையும்பற்றி விரிவாகப் பேசினார்கள். தோழர் எஸ். ஆர். காந்தி, திராவிடநாடு தனித்திருக்கவேண்டிய அவசியத்தை விளக்கி அரிய சொற்பொழிவாற்றி திராவிடநாட்டுப் படத்தைத் திறந்துவைத்தார்.

தோழர் சம்பத் அவர்கள் கறுப்புச் சட்டைப்படை அமைக்கப்பட்டதின் நோக்கங்களை விளக்கிப் பேசியபின் தளபதி அண்ணாதுரை அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினை திட்டத்தை விளக்கி நீண்டநேரம் அரிய சொற்பொழிவாற்றினார். இதோடு இரவு உணவிற்காக மாநாடு கலைந்தது.

பொன்மலை திராவிட நடிகர் கழகத்தாரால் 11-5-46 இரவு "அவன் பித்தனா" என்ற நாடகம் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

12-5-46 காலை 9-30 மணிக்கு மாநாடு மீண்டும் பெரியார் தலைமையில் தொடங்கியது. தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தி எதிர்ப்பில சிறைசென்று உயிர்நீத்த தமிழ்மணிகள் தாலமுத்து நடராசன் இவர்கள் தொண்டையும், தியாகத்தையும், விளக்கி ஓர் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார். தோழர் அன்பழகன் அவர்கள் கறுப்புச் சட்டைப்படையின் அவசியத்தை விளக்கிப்பேசினார். பின்னர் தோழர் அழகிரிசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத் தத்துவத்தை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார். இதற்கிடையே நகருக்குள் குழப்பம் நடந்துகொண்டிருப்பதாகவும் கறுப்புச்சட்டைத் தொண்டர்களை காலிகள் தாக்கி துன்புறுத்துவதாகவும் அரைகுறைச் செய்தி நகரிலிருந்து வந்துகொண்டிருந்தது.

இதோடு கறுப்புச்சேலை உடுத்திக்கொண்டு தெருவில் வந்துகொண்டிருந்த திராவிடத் தாய்மார்களையெல்லாம் காங்கரஸ் காலிகள் அவதூறாகப் பேசுவதாகவும், பல இடங்களில் பறந்துகொண்டிருந்த திராவிடர் கழகக்கொடிகளையெல்லாம் இறக்கி காங்கரஸ்காரர்கள் கொளுத்துவதாகவும் செய்தி வந்தது.

இவைகளைக்கேட்டு ஆத்திரங்கொண்டு பந்தலுக்கு வெளியே அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்த தொண்டர்களுள் சமார் 100பேர் வரை புறப்பட்டு ஊருக்குள் இருக்கும் கறுப்புச் சட்டைத் தொண்டர்களை ஆபத்தில்லாமல் கொண்டுவருவதென சென்றுவிட்டனர். இது தெரிந்ததும் பெரியார் அவர்கள் நம் தொண்டர்கள் யாரேனும் அடிபட்டிருந்தால் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டுமேதவிர எதிர்க்கக்கூடாது என்றும், ஆத்திரப்பட்டு சென்றவர்களும் உடனே திரும்பிவிடவேண்டுமென்றும் பேசவே, மேற்கொண்டு தொண்டர்கள் யாரும் போகவில்லை. எல்லோரும் மாநாட்டில் அமைதியாக இருந்தனர்.

நகருக்குள் சென்ற தொண்டர்களையும் காலிகள் தாக்கவே இவர்களும் திருப்பித் தாக்க இருதரப்பிலும் சிலர் காயமுற்றதாகத் தெரிகிறது. அக்கிரமமாக தாக்கிய காலிகளை அடக்காது போலீஸ்காரர்கள், சென்றிருந்த கறுப்புச்சட்டைத் தொண்டர்கள் அனைவரையும் ஓர் பங்களாவிற்குள் பூட்டி வைத்துவிட்டனர். இதனால் காலிகளுக்கு இன்னும் இடமாகி மாநாடு நடக்கும் இடத்திற்கும் போவோம் என்ற துணிவு ஏற்பட்டு விட்டது.

போலீசார் அடைத்து வைக்கப்பட்டிருந்த தொண்டர்களை அழைத்து வர குதிரைவண்டியில் சென்ற மத்திய திராவிட கழகச் செயலாளர் தோழர் ஆ. திராவிடமணி அவர்களை காலிகள் வழிமறித்து பலமாகத்தாக்கினர். சில முஸ்லிம் தோழர்கள் உதவியால் தோழர் திராவிடமணி அவர்கள் சிறிதுநேரம் அவர்கள் வீட்டில் இருந்து பின்னர் திரும்பிவந்தார்.

## கலவரத்திற்குக் காரணம்

முன்னாள் நடந்த மாபெரும் ஊர்வலத்தையும், வெற்றிகரமாக மாநாடு நடைபெறுவதையும் கண்ட எதிரிகள் எப்படியேனும் அடுத்தநாள் கலவரம் செய்து மாநாட்டை கலைப்பதென்ற முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது. முதல் நாள் இரவு ஆங்காங்கு நகருக்குள் காங்கரஸ்காரர்கள் கூடி அதற்கான சதியாலோசனை நடத்தி, வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ததாகத் தெரிகிறது. மறுநாள் கடையடைப்பு இருந்தாலும் காங்கரஸ் கூட்டங்களும், ஓடடல் தொழிலாளர் கூட்டமும் நடைபெற ஏற்பாடு செய்திருந்ததாலும், காலித்தனத்திற்கு அதிக சாதகமாக இருக்கும் என எதிரிகள் கருதி காலிகளுக்கு எல்லாம் கூலி கொடுத்து குடிக்கவிட்டு வரச்சொல்லியதாகத் தெரிகிறது. இவைகளையெல்லாம் உண்மையாக்கும் முறையிலே மறுநாள் காங்கரஸ்காரர்களின் போக்கும் நடத்தையும் இருந்தது. காலிகளோடு சேர்ந்துகொண்டு காங்கரஸ்காரர்களும் மாநாட்டிற்குவந்து தெருவில் சென்றுகொண்டிருந்த கறுப்புச்சேலை உடுத்தி இருந்த தாய்மார்களையெல்லாம் அவதூறாகப் பேசினர். திராவிடர் கழகக் கொடிகளைக் கொளுத்தும் வேலையிலும், காலிகளோடு இவர்களும் கலந்திருந்தனர். காலிகள் தொண்டர்களைத் தாக்கும்போதும் காங்கரஸ்காரர்கள் உடனிருந்து தூண்டிவிட்டனர். "ஜெய்ஹிந்த், வந்தேமாதரம்" "கோயிலில் பெண்களை அவமானப்படுத்தினர், காங்கரஸ் கொடியை கறுப்புச்சட்டைப் படையினர் கொளுத்திவிட்டனர், அதனால் ஒன்று இரண்டு அவர்களை எதிர்க்க வேண்டும்" என்று காங்கரஸ்காரர்களே எங்கும் பறையடித்து அன்று காலையிலே துர்ப்பிரசாரம் செய்ததாகவும் செய்தி கிடைத்தது. இவ்விதமெல்லாம் செய்துவிட்டு, கோயிலில் பெண்களை அவதூறாகக் கறுப்புச்சட்டைப் படையினர் பேசியதாலேயே கலகம் ஏற்பட்டதென காங்கரஸ்காரர்கள் கட்டுப்பாடாக வெளியே பேசியிருக்கின்றனர். தேசியப் பத்திரிகைகளும் காங்கரஸ்காரர்களின் சதியைப்பற்றியோ, அவர்களின் தூண்டுதலால் நடைபெற்ற அட்டூழியங்களைப் பற்றியோ ஒரு வார்த்தையும் சொல்லாமல், கோயிலுக்குச்சென்ற பெண்களை அவதூறாகப் பேசியதால் கறுப்புச்சட்டைப் படையினர் மீது பொதுமக்கள் ஆத்திரங்கொண்டனர். அதனால் அவர்களைக் கண்ட இடத்திலெல்லாம் விரட்டியடித்தனர் என்று எழுதின. அசோசியேட்டட் பிரஸ் நிருபராலும் உண்மைக்கு மாறாக காங்கரஸ்காரர்களின் பித்தலாட்டப்பேச்சைச் செய்தியாக அனுப்பப்பட்டிருக்கிறது. திராவிடர் கழகத்தைப்பற்றிக் கனவில்கூட நினைத்தறியாத அகில இந்திய ரேடியோக்காரராலும் திராவிடர்கழகத்தின்மீது திடீரென்று கவலை ஏற்பட்டதுபோல் பார்ப்பனர்களும், காங்கரஸ்காரர்களும் சொன்ன பித்தலாட்டப் பேச்சே ஒலிபரப்பப்பட்டது.

## காலிகளின் நாசவேலை

மதுரை நகர் தெருக்களில் கறுப்பு உடையோடு சென்ற தாய்மார்களை அவதூறாகப் பேசியதோடும், தனித்து வந்துகொண்டிருந்த தொண்டர்களை ஆங்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

பரிசு ரூ. 500

லக்கி காம்பெட்டிஷன்—1

முடிவு தேதி 8-6-46

2முதல் 25வரையில் நீங்கள் எண்ணுகிற நம்பரை தனிக் காகிதத்தில் எழுதி கூப்பன் ஒன்றுக்கு பிரவேச கட்டணம் அணா 8 வீதம் அனுப்புக. எத்தனையும் போடலாம். சீல் செய்த விடைக்கு பரிசு.

மானேஜர், "நந்தி" ஆபீஸ்,
73 சுவாமி சன்னதி,
திருநெல்வேலி டவுன்.

எமது புது வெளியீடுகள்

பார்ப்பனப் பருமோசு விளக்கம்: (1939 "விடுதலை"யில் வெளிவந்தது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அனுமதிபெற்று வெளிவருகிறது)

கறுப்புச் சட்டைப்படை வழிநடைப் பாட்டு: (நாடக மெட்டுக்களில் திருவத்திபுரம் தோழர் மாவண்டார் தேவராசன் இயற்றியுள்ளார்)

தன்மானத் தாலாட்டு: 0-2-6. (பாட்சிக்கவிஞர் பாரதிதாசன், திருவத்திபுரம் மாவண்டார் தேவராசன் இயற்றியது)

குறிப்பு:- இவைகள் எல்லாம் தூத்துக்குடி மாநாடுகளில் (18, 19-5-46) கிடைக்கும்.

விவரங்களுக்கு:-

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ.

# புறப்படுங்கள் போருக்கு!

(18-5-46 குடந்தையில் சர் பி. தியாகராயர் பந்தலில் நடைபெற்ற, தஞ்சை மாவட்டத் திராவிடர் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர், தோழர் V. சின்னத் தம்பி அவர்கள் நிகழ்த்திய பேருரை)

பெரியார் அவர்களே! அன்புத் தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! வணக்கம்.

இன்று இங்கு நிகழவிருக்கும் தஞ்சை மாவட்டத் திராவிடர் மாநாட்டின் சார்பாக உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வரவேற்பு உரித்தாகுக. இன்றைய உலக நிலையில் நாடு நலம்பெற வழிகோலுவதற்காகவா, அரசியல் சுதந்திரம் நல்கவும், பிரிட்டனினின்றும் பறந்து வந்துள்ளோம் எனக்கூறும் பாராளுமன்றத்தின் அமைச்சுக் குழுவின் ஆராய்ச்சிப் படலம் ஓர்புறம் நிகழவும், காங்கரஸ் மந்திரிசபையின் ஆணைப் படலம் ஓர்புறமும், இன்னும் வகையாய அமைப்புத்திட்டங்களைப்பற்றிய ஆராய்ச்சிகள் பலவாறு நிகழும் இந்நாளில், இந்நாட்டின் பழம் பெருங்குடி மக்களாய் நாலரைக்கோடி மக்களைக்கொண்ட திராவிட சமுதாயத்தினராகிய நாம், நமது எதிர்கால நிலையைப்பற்றிய திட்டங்களை வகுக்க இம்மாநாட்டின் பந்தலில் கூடியிருக்கிறோம். உலகில் உள்ள ஒவ்வொரு இனத்தாரும் தம் தம்முடைய உரிமைகளுக்காக ஜீவ மரணப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இந்நாளில் நாம் மட்டும் அயர்ந்துவிடுவோமேயானால் என்றென்றும் அழிந்துவிடுவோம் என்பது உறுதி. எனவே அழைக்கிறார் பெரியார் "புறப்படுங்கள் போருக்கென்று"

தோழர்களே! நாம் திராவிடர்கள், நமது இனம் திராவிட இனம், நமது நாடு திராவிடநாடு. இதற்கு மாறாக நம்மை இந்தியரென்றோ, நமது இனம் இந்து இனம் என்றோ, நமது நாடு இந்திய நாடு என்றோ கொள்ளுவோமேயானால் நம்மை நாமே தற்கொலை செய்து கொள்வதாகத்தானிருக்கும். இவ்வாறு கருதியதினாலேயே இன்பத் திராவிடத்தில் இருள் சூழ்ந்தது. இன்றைய திராவிடம் எந்நிலையில் உள்ளது என்பதை சற்றே சிந்தியுங்கள். சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் ஆரியனுக்கும் ஆங்கிலேயனுக்கும் அடிமைப்பட்டுள்ளது. சமுதாயத்தில் சூத்திரர்களாகவும், அரசியலில் வடநாட்டுக்கு வாலர்களாகவும், பொருளாதாரத்தில் பிர்லா, பஜாஜ் போன்றவர்களின் பிணிப்பிலும் உள்ளவர்களாக இருக்கிறோம். இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமாயின், நாம் யாவரும் திராவிடர்கள், நமது இனம் திராவிட இனம். நமது நாடு திராவிடநாடு என்ற உண்மையை உணர்ந்து, திராவிட நாட்டைத் திராவிடர்களுக்காக்குதல் வேண்டும். ஈண்டு குழுமியுள்ள வாலிப ஜீவரத்தினங்களின் ஒளிவீசும் கண்களும், மாணவமணிகளின் முகமலர்ச்சியும், உள்ளக் கிளர்ச்சியும், "திராவிடநாடு திராவிடர்க்காகும் நாள்" அண்மையில் உள்ளது என்பதை அறிவிப்பதோடல்லாமல் என் போன்றாரை மேலும் மேலும் இயக்கத்தில் தொண்டாற்றும்படி ஊக்குவிக்கிறது.

நமக்கு நம் கொள்கைகளில், நமது ஆட்சியதில் உள்ள அவசியமும், உறுதியும், அதற்காக எதையும் பலிகொடுக்கத் தயாராய் இருக்கிறோம் எனும் துணிவும்தான் ஆதரவும், உதவியும், சாதனமுமாய் இருக்கமுடியும். நமக்கு எதிர்ப்பு அதிகமாகவே இருந்து காரியத்தைக் கெடுக்கும் தந்திரக்கூட்டம் அதிகம். எதிர் நீச்சலும், செங்குத்தான குன்றின் மேல் பாரமான குண்டை மேலே கொண்டுபோக உருட்டும் வேலையும், போன்ற அபாயகரமான காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறோம். வாழ்வு அல்லது சாவு என்று அறுதியிடும்படியான கஷ்டத்தில் இருக்கிறோம். நம் பாதையில், பிரயாணத்தில், முழந்துக்கு முழம், அங்குலத்திற்கு அங்குலம், தட்டுத்தடுமாறி விழும்படியான காடுமுரடான பாதையில் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே நன்றாய் ஆலோசித்து நம்மை திடப்படுத்திக்கொண்டு எந்த தடையையும் தாங்குதற்கும். துணிந்து நம் வேலையைச்செய்ய முற்படவேண்டியவர்களாக உள்ளோம்.

நம் இன இழிநிலையை உணர்ந்து வாழவேண்டி கறுப்புச் சட்டையை அணிந்துவிட்டோம். பிரெஞ்சு மக்களுக்கு உணர்ச்சி ஊட்டிய ஒரு ரூசோ போல், சோவியத் மக்களைத் தட்டி எழுப்பிய ஒரு கார்ல்மார்க்ஸ் போல், சீன மக்களை சிங்கங்களாக்கிய ஒரு சன்யாட்சென் போல், நம் இனத்திற்கு "பெரியார்" இருக்கிறார். பிரெஞ்சு தளபதி டிகால் போல், சோவியத் தளபதி ஸ்டாலின், சியாங்கேசேக் போல் நம் இனத்திற்கு தளபதி அண்ணா இருக்கிறார். ஒடுங்கி உள்ளத்திற்கு உற்சாகம், உணர்ச்சி ஆகியவற்றை அளிப்பதற்கும், வீழ்ச்சியுற்ற திராவிடத்தில் எழுச்சியை எற்படுத்துவதற்கும், இருளைநீக்கி ஒளியை பாய்ப்புதற்கும் இருக்கிறார் நமது பாட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்

"மண்ணிடை வாளை யேந்தி
பகைப்புலம் மாய்ப் பதற்கும்
எண்ணிலாத் திராவிடர் உளார்
எனும் நிலை காண்பதென்றோ"

என ஏங்குகின்றனர். நமது தந்தையும் தலைவனும் கவிஞரும். நம் பெரியார் வகுக்கும் வழிநின்று, அண்ணாவின் ஆணைக்குட்பட்டு, நமது கவிஞரின் நினைவுகள் யாவற்றையும் நிகழ்ச்சியாக மாற்றுவதே நம் கடமையாகும்.

தோழர்களே! உணவுப்பொருள்கள் தட்டுப்பாட்டின் காரணமாக கட்டுப்பாடுகள் மிகுதியும் உள்ள இந்நாளில் எங்களால் இயன்ற அளவு அரசியலாரின் சட்டதிட்டங்கட்கு உட்பட்டு எல்லாவித சௌகரியங்களையும் செய்துள்ளோம். எனினும் ஏதேனும் சில குறைபாடுகளும், அசௌகரியங்களும் இருக்கலாமென்பதை நாங்கள் உணருகிறோம். ஆயினும் தியாகத் தீயில் குதிக்கத் துடிக்கும் தோழர்களாகிய நீங்கள் யாவரும் அக்குறைபாடுகளை பொருட்படுத்த மாட்டீர்கள் என்ற திடமான நம்பிக்கைதான், இம்மாநாட்டை எப்படியும் நடத்தியே தீருவதென்ற துணிவை எங்களுக்களித்தது. நம் பெரியார் அவர்களின் இயக்கத்திற்கு அன்றும் என்றும் தக்க ஆதரவளித்து தலையாய முறையில் திகழும் தஞ்சை மாவட்டத்தின் பெருமைககு பங்கம் நேராதவாறு இம்மாவட்டவாசிகளாகிய நாம் யாவரும் விடாது உழைக்க வேண்டுமென விழைந்து, மறுமுறையும் உங்கள் யாவருக்கும் நல்வரவு கூறி மனமார வரவேற்கிறேன்.

## நடக்க இருப்பவை

★

● 21-5-46 மாலை 7மணிக்கு திருச்சி தென்னூர் திராவிடர் கழகத்தின் திறப்பு விழா வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சனார்த்தனம், டி. கே. சீனுவாசன் பேசுவார்கள். அனைவரும் வருக,

● 20-5-46 மாலை 6மணிக்கு நீடாமங்கலம் சீனிவாசப்பிள்ளை சத்திரத்துக்கு முன் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் ஈ. வி. கே. சம்பத், அன்பழகன், இளம்வழுதி ஆகியோர் "மதுரையும் நமது நிலையும்" என்பது குறித்து பேசுவர். தவறாது வருக கருஞ்சட்டையுடன்!

---

## வடசென்னை திராவிடர் கழகம்

### பொதுக்கூட்டம்

19-5-46 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு வண்ணை ஜெயராம் நாடார் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் எஸ். டி. எம். பழனிசாமி, எம்.கே.டி. சுப்ரமண்யம், ஜெயசந்திரன், எஸ். ஆர். சாண்டோ, என். வி. நடராசன் மற்றும் பலர் பேசுவர். அனைவரும் வருக.

## ரெட்ஹில்ஸ் திராவிடர்கழக மாணவர் பொதுக்கூட்டம்

19-5-46 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு ரெட்ஹில்ஸ் பெட்ரோல்பங்க் மைதானத்தில் நடைபெறும். தோழர் கே. கோவிந்தசாமி, தலைமை வகிப்பார். மாணவத் தோழர்கள் பலவர் தியாகராசன், அப்பாவு ஆகியவர்களும் தோழர்கள் என். ஜீவரத்தினம், என். வி. நடராசன் பேசுவர்.

## மறைவு

நீண்டகாலமாக நமது இயக்கவர்தியான ராசீபுரம் தோழர் மு. காவேரி அவர்களின்மகளார் ஆண்டாள் 14-5-46 அன்று இறந்தது குறித்து தனது அனுதாபத்தை தந்திமூலம் தோழர் சாமிநாதன் தெரிவிக்கிறார்.

---

## மணமகள் தேவை

18-வயது முதல் 23-வயது வரையுள்ள, செக்கண்டரி கிரேட் அல்லது ஹையர் கிரேட் உபாத்தினியாய் இருக்க வேண்டும். இளம் விதவையாயிருந்தாலும் ஒப்புக்கொள்ளப்படும். சாதிமத பேதம் கிடையாது. மணமகன் வயது25. மாதச்சம்பளம் ரூபாய் 75 பெறுபவர். மற்ற தகவல்கள் கடிதம்மூலம் அறிந்து கொள்ளலாம். கடிதப்போக்குவரத்து பத்திரமாகவும், இரகசியமாகவும், உத்திரவாதத்துடன் நடத்தப்பட வேண்டும். கீழ்கண்ட விலாசத்திற்கு தெரியப்படுத்திக்கொள்ளவும்.

சத்தி மாணிக்கம்,
C/o குடி அரசு, ஈரோடு

குடி அரசு

1946-ளு மே-மீ 18உ

# மதுரை கலவரம்

(ஈ. வெ. ரா.)

மதுரை கறுப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு ஊர்வலம் 11-5-46ந் தேதி மதுரை காங்கரஸ் காரர்களை கதிகலங்கச் செய்து விட்டது. 50,000 மக்கள் கொண்ட 6மைல் ஊர்வலமும், சௌராஷ்டிர, பார்ப்பன ஆண்கள், பெண்மணிகள் உட்பட ஊர்வலத்தை கடவுள் உற்சவ ஊர்வலமாகக் கருதி கும்பிட்டு மரியாதை செய்த மூடநம்பிக்கைக் காட்சியையும், வைகை ஆற்றில் போடப்பட்டிருந்த பிர்மாண்டமான கொட்டகையிலும் அதற்கு வெளியிலும் கூடியிருந்த லட்சக் கணக்கான மக்களையும் கண்டு மனம்வெடிக்கப் பொறாமை கொண்ட காங்கரசாரில் 11ந்தேதி இரவே சில தலைவர்கள் கூடி சுமார் 1000 ரூபாய்போல் தங்களுக்குள் செலவு தொகை ஏற்பாடு செய்துகொண்டு இரவு முழுதும் சுற்றி அலைந்து தொண்டர்களையும், கலகக்காரர்களையும் ஏற்பாடு செய்துகொண்டு 12ந்தேதி காலையில் அட்டூழியம் துவக்கி விட்டு விட்டார்கள்.

இப்படிச் செய்வதற்கு தங்களுக்கு ஒரு சாக்கு கற்பித்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு ஆகவே இரண்டு விஷயங்களை கற்பனை செய்துகொண்டார்கள்.

1. கறுப்புச்சட்டையினர் கோவிலில், சாமி; பெண்கள் ஆகியவர்களை அவமதித்ததாகவும்,

2. காங்கரஸ் கொடியை கொளுத்தினதாகவும்,

கற்பித்த இருவிஷயங்களை காங்கரஸ்தொண்டர்கள் ஊர்முழுவதும் குழாயில் கூவியும், பறைபடித்தும் ஜனங்களை கிளப்பிவிட்டார்கள். அப்படி இருந்தும் ஜனங்கள் ஒன்றும் ஆத்திரம் அடையாமல் அலட்சியமாகவே இருந்துவிட்டார்கள்,

பிறகு காங்கரஸ்காரர்கள் சிலர் மதுரை நகரில் உள்ள கறுப்புச் சட்டைப்படை காரியாலயத்தில் புகுந்து (அந்தசமயம் அங்கு ஒருவரும் இல்லை, எல்லோரும் மாநாட்டில் இருந்தார்கள்) அங்குள்ள சாமான்களை எடுத்துக்கொண்டு கட்டி இருந்த கொடியையும் சாய்த்துப் பிடுங்கிக்கொண்டு, கூட்டமாக வீதியில் கூப்பாடு போட்டுக் கொண்டு வழிநெடுக கட்டி இருந்த கொடிகளையும் பரித்துக்கொண்டு எதிரில் தென்பட்ட இரண்டொரு கறுப்புச்சட்டை போட்டிருந்தவர்களையும் தாக்கிக்கொண்டு கூத்தடித்தவண்ணம் தோழர் ராதா வீட்டிற்குச்சென்றிருக்கிறார்கள். அங்கு அந்த வீடு தாளிட்டிருந்தபடியால் பெரும் பெரும் கற்களை கதவின்மீது எறிந்திருக்கிறார்கள்.

இந்த சமயத்தில் இரண்டொரு தொண்டர்கள் டவுனிலிருந்து கொட்டகைக்கு ஓடிவந்து இந்தப்படி காங்கரஸ்காரரால் டவுனில் காலித்தனம் நடப்பதாகச் சொன்னார்கள். இதைக்கேட்டவுடன் நான் கொட்டகையில் இருந்தவர்களுக்கு தக்கபடி அடக்கம், பொருமை, கட்டுப்பாடு ஆகியவைகளைபற்றி மறுபடியும் (அதாவது முதல்நாள் எனது தலைமை உரையில் இவைகளையே சொன்னேன்) வற்புறுத்திச் சொல்லியாரையும் பந்தலுக்கு வெளியில் போகக்கூடாது என்றும் சொல்லி அடக்கிவிட்டு மாநாட்டை நடத்திக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் மறுபடியும் சில தொண்டர்கள் மேடைக்குஓடிவந்து, "காங்கரஸ் காலிகள் வழிநெடுக கறுப்புச்சட்டைக் காரரை தாக்கிக்கொண்டு இங்கும் வரவும், கொட்டகையை கொளுத்தவும், திட்டம்போட்டுக்கொண்டு இருக்கிறார்கள், வரப்போகிறார்கள்" என்று சொன்னார்கள். நான் அதைப்பற்றி கவலைப்படாதீர்கள் வந்தால் பார்த்துக்கொள்ளலாம் நீங்கள் வெளியில் போகாதீர்கள் என்று சொன்னேன். கொட்டகையில் இருந்த ஒரு தொண்டர் இரண்டு ஊர் வாலண்டியர்கள் ஒன்றாய் வந்து சேருங்கள் என்று ஒலிபெருக்கியில் கூப்பிட்டார். அவர்கள் பந்தலுக்கு முன்புறம் சுமார் 100, 200 பேர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு அந்ததொ[ண்]டர் ஊருக்குள் இருக்கும் கறுப்[பு]சட்டை பிரதிநிதிகளை காப்பா[ற்ற] அழைத்துவரச் சென்றார்க[ள்] வழியில் ஒரு இடத்தில் இ[வர்]களைக்கண்ட போலீசார் மே[லே] செல்ல ஒட்டாமல் தடுத்து ... படியே ஒரு இடத்தில் சேர்த்[து] போல் அடைத்துவைத்து கொ[ண்]டார்கள். இது தெரிந்து திரா[விட] கழக பொதுகூட்டுக் காரிய[தரிசி] தோழர் திராவிடமணி கொட்டகையில் இருந்த ஒரு சப்இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு டவுனுக்குள் சென்றார். சப்இன்ஸ்பெக்டர் சைக்கிளில்சென்றார், திராவிடமணி குதிரைவண்டியில் சென்றார். சைக்கிள் வேகமாகச் சென்றதால் மறைந்துவிட்டது. திராவிடமணி சென்ற வண்டியை காங்காஸ்காரர்கள் நிறுத்தி, திராவிடமணியை இறங்கச்செய்து கடினமாகத் தாக்கினார்கள். தாக்குதல் பொருக்கமாட்டாமல் அவர் ஓடி ஒரு அடுத்த முஸ்லிம் வீட்டிற்குள் புகுந்துவிட்டார். ஆனால் அவர் எங்கு போனார் என்று மற்ற நம் தொண்டர்களுக்குத் தெரியாததால் "திராவிடமணியை தூக்கிக்கொண்டுபோய் விட்டார்கள்" என்று சத்தம் கொட்டகையில் போடப்பட்டது.ஜனங்கள் ஒரேகட்டுப்பாடாய் எழுந்தார்கள். நான் எழுந்து அவர்களை உட்காரச்சொல்லிக்கொண்டிருக்கும் போது போலீஸ் ஜில்லாசூப்ரண்டு, சில இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள், பேஜிஸ்ட்ரேட்டுகள் ஆகியவர்கள் கொட்டகைக்குள் நுழைந்து மேடைக்கு வரலாமா என்று கேட்டார்கள், நான் வரலாம் என்றுசொன்னேன். நகரத்தில் காலித்தனம் (ஹூலிகானிசம்) தலை விரித்தாடுகின்றது. இங்கு வராதபடி தக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். உங்கள் கூட்டத்தை எவ்வளவு சுருக்கி நடத்தலாமோ அவ்வளவு சுருக்கமாக நடத்தி முடியுங்கள் என்று சொன்னதோடு உங்கள் ஆட்களுக்கு ஒன்றும் கவலை வேண்டியதில்லை, அவர்களை அடக்கமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஜில்லா சூப்பரண்ட் சொன்னார். கலகத்துக்குக் காரணம் என்ன என்று கேட்டேன். அதில் ஒருவர் இன்றை ஆட்சி அப்படி இருக்கிறது நாம் என்ன செய்யமுடியும்? என்றார்.

அதோடு கூடவே மற்றொருவர் "உங்கள் ஆளுகள் காப்பிக்கடை கண்ணாடிகளை உடைத்ததாகவும், காங்-கரஸ் கொடியை அவிழ்த்து கொளுத்தியதாகவும், கோவிலில்சென்று கணேச விக்கிரகத்தை தொட்டு விட்டதாகவும் சொல்லுகிறார்கள்"

## மதுரை படிப்பினை என்ன?

☆

மதுரையைப்போல் இன்னும் பல தொல்லைகளை நாம் அனுபவிக்க நேரிடும். அந்த அனுபவத்தின் மூலம் தான் நாம் மனிதத்தன்மை பெற்று திராவிடத்தைப் பெறப்போகிறோம். ஆகவே நாம் செய்யவேண்டியது யாவரும் கறுப்புச்சட்டை அணியவேண்டும். எங்கும் கறுப்புக்கொடி பறக்க வேண்டும். ஒவ்வொருவர் வீட்டிலும் உடையிலும் கறுப்புக்கொடி சின்னம் துலங்க வேண்டும்.

இந்தக் காரியம் தான் நாம் மதுரையைக்கண்டு பயந்தோமா, துணிவும் வீரமும் கொண்டோமா என்பதை உறுதிப் படுத்தும்.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 18-5-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 45,413

இம்மாதம் 18உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல் வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப் பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 7799 | 7. சென்னை இவ்வாண்டில் 1138 | 3608 |
| 2. தஞ்சை | 7338 | 8. இராமநாதபுரம் | 2883 |
| 3. கோவை | 6190 | 9. தென் ஆற்காடு | 2531 |
| 4. திருச்சி | 5371 | 10. மதுரை | 1809 |
| 5. திருநெல்வேலி | 3423 | 11. செங்கல்பட்டு | 950 |
| 6. வட ஆற்காடு | 3397 | 12. மற்ற இடங்களில் | 714 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

என்று சொன்னார். உடனே எனக்கு கோபம்வந்து இந்தப்படி நம்மவர்கள் நடந்ததாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இப்படி நம்மவர்கள் செய்வது என்றால் நமக்கு யோக்கியதையா என்றுகேட்டேன். உடனே D.S.P. அவர்கள், அவர்கள் செய்ததாக நான் சொல்லவில்லை, செய்ததாக காங்கரஸ்காரர்கள் சொன்னார்கள், அதை உங்களிடம் சொன்னேன் என்று சொன்னதோடு, "இதை இந்த ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்றார் (அதாவது இந்தப்பழி கற்பனை என்பதை அவர் அப்போதே உணர்ந்திருக்கிறார் என்பதற்கு அறிகுறியாகும்)

எனவே முதல்நாள்ராத்திரி, காங்கரஸ் தலைவர்கள் தோழர் வைத்தியநாதய்யர் தந்திபத்திரிகை ஆசிரியர் இன்னும் இரண்டொருவர் சேர்ந்து வம்புச்சண்டைக்கு வர ஏற்படுத்திக்கொண்டகாரணங்கள் இவை என்றும், அங்கு கோவிலுக்கு உண்மையில் ஆண்கள் யாரும் செல்லவில்லை. வெளியூர் பெண்கள் சிலர் கோவிலுக்குப் போனார்கள் என்றும் சிலர் அப்போதே சொன்னார்கள்.

இதன்பின் சில தீர்மானங்கள் படிக்கப்பட்டு என்னால் முடிவுரை கூறப்பட்டு தலைவருக்கும், போலீசுக்கும் நன்றிகூறி கூட்டம் முடித்து யாவரும் கொட்டகை விட்டு வெளிவந்துவிட்டோம்.

வெளிவந்தவர்கள் ஊருக்குள் சாப்பாட்டுக்குப் போனால் காங்கரசார் அடிப்பார்கள் என்றும் சாப்பாடு இங்கேயே கொண்டு வரப்படும் என்றும், யாரும் வெளியில் போகக்கூடாது என்றும் மேஜிஸ்ட்ரேட், சப் இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்து சொன்னார்கள், அதன்மீது யாரும் வெளி செல்லவில்லை. கடைசிவரை அன்று முழுவதும் சாப்பாடு வரவில்லை. காரணம் கேட்டதில் காங்கரசார் நாம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்த ஓட்டலுக்குள் புகுந்து சாப்பாட்டை நாசம்செய்துவிட்டதாக பிற்பகல் 4மணிக்குச் சொன்னார்கள். இதற்குள் காலி கூட்டம் பந்தலுக்கு வந்து அங்கு ஒவ்வொரு கொட்டகையாக நெருப்பு வைத்துவிட்டு பிரதிநிதிகள் தங்கி இருந்த ஒரு முனிசிபல் பள்ளிக்கூட கட்டிடத்திற்குள் புகுந்து அங்குள்ள சிலரை அடித்துவிரட்டிவிட்டு, அங்குள்ள சுமார் 300, 400 பிரதிநிதிகளின் கைபை, பெட்டி, செருப்பு, குடை, பாத்திரம், முதலியவைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். சிலர் நான் இருந்த கட்டிடத்தையும் மற்றும் பிரதிநிதிகள் இருந்த கட்டிடத்தையும் சூழ்ந்துகொண்டு கற்களை எறிந்தார்கள், இந்த இடத்தில் போலீசார் துப்பாக்கியுடன் காவல்காத்து காங்கரஸ்காரர்களை விரட்டிக்கொண்டே இருந்தார்கள்.

எனவே மாலை கொட்டகையிலும், பிறகு பிரதிநிதிகள் 20000 பேர்கள் சுமார் அடைபட்டுக் கிடந்த கட்டிடத்திலும் இந்த காரியம் மாலை 7மணிவரை நடந்த வண்ணமாக இருந்தது.

மாலை சுமார் 5-30 மணிக்கு D. I. G. (டி. ஐ. ஜி.) D. S. P. (டி. எஸ். பி.) சில இன்ஸ்பெக்டர்கள், மேஜிஸ்ட்ரேட்டுகள் நான் இருந்த ஜாகைக்குவந்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு தங்களால் அடியோடு அடக்கமுடியாததற்கு காரணம் சொல்லி தங்களுக்கும் (D. S. P.க்கும்) கண்ணிற்கு பக்கத்தில் கல்லடிபட்டு ஒழுகிய ரத்த ஒழுக்கோடு, காயத்தைக் காட்டிவிட்டு இன்று 7மணிக்கு ஊரடங்கு சட்டம் போடப்போகிறபடியால் யாரும் ஊருக்குள் நடமாடமுடியாதென்றும் ஆதலால் நீங்கள் இன்றே போவதானால் அடுத்த ஸ்டேஷன்களுக்கு வண்டி சப்ளை செய்கிறோம் என்றும் இல்லாவிட்டால் காலை போகலாம் என்றும் சொன்னார்கள்.

காலை முதல் பலருக்கு ஆகாரமில்லை ஆதலால் இப்பொழுதே அவர்களை அனுப்பிக்கொடுத்துவிட்டால் நலம் என்றேன். சரி வண்டியும் ஆளும் அனுப்புகிறேன் என்று சொல்லி போய்விட்டார். 7-30க்கு பஸ்கள் வந்தன. மக்கள் ஏறி சென்றுகொண்டே இருந்தார்கள். மற்றும் பலர் டவுனுக்குள் இருந்து வந்து சேர்ந்தவர்களும் இருந்தார்கள்.

விசாரித்ததில், கறுப்புச்சட்டை போட்ட தோழர்கள் சுமார் 40, 50பேர்களுக்கு காங்கரஸ்காரரால் அடி என்றும், ஒரு கறுப்புச் சேலை அணிந்திருந்த பெண்ணை அடியோடு சேலையை அவிழ்த்துக் கொண்டு நிர்வாணமாகத் தெருவில் ஓட ஓட சாத்தி காங்கரஸ்காரர்கள் அடித்தார்கள் என்றும், சில பெண்களின் முகத்தில் காரி உமிழ்ந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஜாகையில் இருந்து எடுத்துக் கொண்டு ஓடிய சாமான்களும், பிரதிநிதிகளிடம் அடித்து மிரட்டி பிடுங்கிக்கொண்ட பணமும், காணாமல்போன சாமான்களின் பொருமானமும் எல்லாம் சேர்ந்து சுமார் 5000, 6000 ரூபாய் மதிப்பிடப்படுகிறது. இவை தவிர, கொட்டகை, ஸ்டால் கடைகள் ஆகியன நாசப்படுத்தி, கொள்ளை அடித்ததின் காரணமாய் ஏற்பட்ட நஷ்டம் சுமார் 15000 ரூபாய் என்று சொல்லப்படுகிறது.

தோழர் வைத்தியநாதய்யர் அவர்கள் கலவரத்தின்போது வந்தார் என்பது, அவர் பணம்கொடுத்து ஏவி விட்ட காலித்தனம் கிரமமாய் வெற்றியாய் நடந்ததா என்பதை பார்க்க வந்தார் என்றே நம் கூட்டத்தினர் கருதி, அவரை கோபித்து இருக்கிறார்கள். அதற்கு ஏற்றாப்போல் அவர் வந்தவுடன் காலிகள் அவரை மரியாதைசெய்து வழி அனுப்பி இருக்கிறார்கள். போலீஸ் சூப்பிரண்டை கல்லாலடித்த காலிகள் தோழர் வைத்தியநாதய்யருக்கு அடி பணிந்து வாழ்த்துக்கூறினார்கள் என்றால் அதில் நம்மவர்கள் கொண்ட கருத்துக்கு ஆதரவு இல்லாமல் இருக்கமுடியாது.

ஊர்வலத்தின்போதும், மாநாட்டில் எனது தலைமை உரையிலும் கறுப்புச்சட்டைப் படையினரையும், திராவிட கழக தொண்டர்களையும் புத்திக்கூறி அவர்களுக்கு அடக்கம், பொறுமை, ஒழுக்கம், கட்டுப்பாடு, கீழ்ப்படிதல் ஆகியவை கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பதை தொண்டர்கள் மனம் புண்படும்படியான அளவுக்கு நான் இடித்து இடித்துக் கூறி இருக்கிறேன். மக்களிடம் சிறப்பாக காங்கரஸ், கம்யூனிஸ்ட் தோழர்களிடம் நட்புரிமை காட்டவேண்டும் என்றும்

கூறி இருக்கிறேன். இரவு நடந்த நாடகத்தையும் அடக்கமாக நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவை C. I. D. சுருக்கெழுத்து ரிபோர்ட்டைப் பார்த்தால் தெரியும். இப்படியெல்லாம் இருக்க கருப்புச் சட்டையினர் கோயிலுக்குள் செருப்புடன் சென்றது என்பதும், பெண்களை இழிவாகப்பேசியது என்பதும், காங்கரஸ்கொடி கொளுத்தப் பட்டது என்பதும் எப்படி நடந்திருக்க முடியும் என்பதும் எனக்கு விளங்கவில்லை.

தோழர் இராதா வீட்டிற்குப் போய் அங்கு குழப்பமும் நாச வேலையும் செய்யப்பட்டதற்கு தோழர் வைத்தியநாத அய்யர் அறிக்கையிலும் நிருபர் சேதிகளிலும் ஒரு காரணமும் சொல்லவில்லை.

தவிர, கோவில், பெண்கள், சாமி சாக்கை காங்கரசார் குறிப்பாகப் பார்ப்பனர்கள் கட்டுப்பாடாகக் கற்பித்துப் பேசி வருகிறார்கள்.

திருச்சி மாநாடு நடந்த மறுநாள் இதையே சொல்லிக் கலகம் துவக்கினார்கள். அதாவது மலைக்கோட்டை கோவிலுக்குள் சென்று சுவாமியை அசுத்தப்படுத்தினார்கள் என்று எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரித்தன. பிறகு அது சிறிதுகூட உண்மையற்ற அபாண்டப் புளுகாக முடிந்தது. ஒரு கறுப்புச்சேலை கட்டிய பெண்ணை நிர்வாணமாக்கினார்கள் இந்தக் காலிக்கூட்டத்தினர். இந்த அட்டூழியம் பார்ப்பனர் பணத்தால் பார்ப்பனர்கள் பத்திரிகையால் கட்டுப்பாடாகச்செய்யப்படுகின்றன. இன்று நேற்றல்ல. வெகு நாளாகவே செய்யப்படுவதாகும். தோழர் வைத்தியநாத அய்யர் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வார் என்று நான் கருதவேயில்லை. ஆனால் முதல் நாள் ஊர்வலமும், மாநாடும், நாடகமும் பார்ப்பனர்களை அவர்களது கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தச் செய்தேதான் தீரும்.

அதனாலேயே அவர்கள் இந்த விளையாட்டு விளையாடினார்கள் என்னலாம். ஆனால் சுத்த திராவிடர்கள் இதற்கு வானர சேனைகளாக விபீஷணர்களாக இருந்தது நம் சமுதாயத்திற்கே இழிவான காரியமாகும்.

பத்திரிகைகளின் விஷமப்பிரசாரத்தால் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு அட்டூழியம் செய்ய முடிகிறது. ஆனால் இவற்றால் எல்லாம் நமது தன்மானக் கிளர்ச்சி அடங்கி விடும் என்று நினைப்பது அறியாமையேயாகும்.

கறுப்புச்சட்டைப் படையினர் இதை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும். அடுத்த கறுப்புச் சட்டைப்படை மாகாண தனிக்கூட்டம் ஒன்று சமீபத்தில் கூட்டப்படவேண்டும். அது சமீபத்தில் நாம் கூட்டப்படப்போகும் திராவிடர்கழக தனி ஸ்பெஷல் மாகாண மாநாட்டுடன் கூட்டப்படவேண்டும். அதில் நாம் இதில் விட்டுப்போன காரியங்களைத் தொடர்ந்து நடத்தி நம் எதிர்கால போக்கை நிர்ணயிக்கவேண்டும். அதற்குள் கறுப்புச்சட்டை போடுகிறவர்கள் பெருகி அங்கத்தினர் எண்ணிக்கையும் நிதி வசூலும் பூர்த்தியாகவேண்டும். மதுரையில் நடந்த பார்ப்பன சூழ்ச்சி, தொல்லை, துன்பம் ஆகியவை நாம் வேகமாய் நமது லட்சியத்தை நாடிச் செல்வதற்கு சாட்டை அடியேயாகும். நம் பெண்களுக்கும் சில பிரதிநிதிகளுக்கும் மதுரையில் ஏற்பட்ட இழிவு, துன்பம் ஆகியவை நமக்கு உணர்ச்சியை உள்கொள்ளும் மருந்தின் மூலம் கொடுக்காமல் இஞ்சக்ஷன் (அதாவது ஊசிபோடுவதன்) மூலம் செலுத்தப்பட்ட மருந்து மூலம் கொடுக்கப்பட்டதாகக் கருதவேண்டும். பார்ப்பனர் இப்படிச் செய்தும் நமக்கு மானம் உணர்ச்சி வரவில்லையானால் பிறகு நமக்கு பார்ப்பனர் சொல்லும் வேசி மகன், சூத்திரன், கீழ் ஜாதி என்பவைவாகிய பேர் மிக மிகப் பொருத்தமானதேயாகும். ஆகையால் மதுரை படிப்பினை பைக்கொண்டு யார் யார் பரீக்ஷையில் தேறுகிறார்கள் என்றுபார்க்க ஆவலோடு காத்திருக்கிறோம்.

குறிப்பு:-

கவர்ன்மெண்டில் இருந்த ரிபோர்ட் கேட்டவுடன் தோழர் வைத்தியநாதய்யர் தமது இயற்கையான கவுண்டர் ஸ்டேட்மெண்ட் போடும் தொழில் சாமர்த்தியத்தை பயன்படுத்தி மதுரை அதிகாரிகளுக்கு இன்னவிதமாய் ரிபோர்ட் செய்வது என்று வழி சொல்லிக் கொடுக்கும் முறையில் ஒரு அபாண்ட அறிக்கை விட்டிருக்கிறார். துப்பாக்கி அடிபட்டுச் செத்தவர்கள் சௌராஷ்டிரா, பார்ப்பன ஆட்கள். இவர்கள் காங்கரஸ்காரர்கள். குத்துபட்டவர் போலீசார் என்பதை மறந்து பத்திரிகை நிருபர்களும், நிகழ்ச்சி அன்று இரவு (தோழர் வைத்தியநாத அய்யரது) யோசனை கேட்டு அதன்படியே சேதி தயாரித்து அனுப்பி இருக்கிறார்கள். இனி இவைகளை அனுசரித்துத்தான் மதுரை அதிகாரிகள் ரிபோர்ட் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அதிகாரிகளில் சிலரே மதுரையில் காங்கரஸ் ஆட்சியில் இவற்றைத்தான் எதிர்பார்க்க வேண்டியதுதான் என்று ஜாடை காட்டினார்கள். ஆகவால் மந்திரிகள் நீதியும் எப்படி இருக்கும் என்பது முடிவானதேயாகும். எப்படி இருந்[illegible]லும் நமக்கும் நம்தோழர்களுக்கு[illegible] அங்கு நடந்த உண்மைகள் தெ[illegible]யும். கலவரம் எப்படி நடந்த[illegible] யாரால் நடத்தப்படுகிறது? எ[illegible]பதை கண்ணால் பார்த்த[illegible]யாகும். எதிரிகள் தொல்லை[illegible]யும், துன்பத்தையும் அனுபவிக்[illegible] சக்தி நமக்கும் நமது தொண்[illegible]களுக்கும் உண்டு. ஆகவே ந[illegible] பயப்படவோ கலங்கவோ தே[illegible]யில்லை. இந்த மதுரை ப[illegible]பினையில் நம் முயற்சியும் உள்ளமும் சற்று அதிகமாக உறம்பெற்றிருக்கிறது, யாரும் கலங்க வேண்டியதில்லை.

## காங்கரஸ் (தேசிய மடத்திற்கு) தலைவர்

பண்டிதர் ஜவர்லால் நேரு அவர்கள் காங்கரசுக்கு (தேசிய மடத்துக்கு) தலைவராகிவிட்டார். அவருக்குள்ள பகுத்தறிவு, சூட்சும புத்தி, அரசியல் ஞானம், முன்யோசனை நிதானம், பொறுமை முதலாகிய தலைவருக்கு வேண்டிய இன்றியமையாத குணங்கள் எவ்வளவு என்பதை வாசகர்கள் உண்மையாய் அறிந்துகொள்ள வேண்டுமானால் முன்பு ஒரு சமயம் பண்டிதர் நேரு அவர்கள் சென்னை மாகாணத்துக்கு வந்து போனவுடன் அவரைப்பற்றி இந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகள் எழுதியுள்ள விமர்சனத்தில் இருந்து தெரிந்துகொள்ளலாம். அதில் அப்பத்திரிகை பண்டிதரைப் பற்றி குறிப்பிட்டிருந்த ஒரே ஒரு பெருமை என்னவென்றால் "பண்டித ஜவர்லால் நேரு அவர்கள் பண்டித மோதிலால்நேரு அவர்களின் அருமைப் புதல்வர் என்பதைத்தவிர வேறு ஒரு நல்ல குணமும், தலைவருக்கு வேண்டிய தன்மையும் அவரிடம் கிடையாது" என்று எழுதி இருந்தன.

இப்பொழுது மற்றொரு அருங்குணம் அவருக்கு சேர்க்கைப் படலாம்.

அதாவது,

காந்தியார் பண்டித ஜவஹர் லால்நேரு அவர்களை தனது பின் சந்ததியாய் வாரிசாய் கருதி செல்லப்பிள்ளையாக நடத்துகிறார் என்பதாகும். எப்படி இருந்தாலும் காங்கரஸ் ஒரு மடமாகையால் மடாதிபதிகள் பட்டத்திற்கு வருவதற்குமுன் புத்திசாலிகளாய் திறமைசாலிகளாய் இருக்கவேண்டும் என்கின்ற அவசியமில்லை என்பதும், பட்டம் ஆகிவிட்டால் யாரும் அதிபதிகளாக "சுவாமிகளாக" ஆகிவிடுவது என்பதும் யாவரும் அறிந்ததேயாகும். அதுபோல் நமது பண்டிதரும் மடத்து மக்க

## இனிப் பொறுக்க முடியாதாம்

[மது]ரையில் கருப்புச்சட்டைப் [பட]டயினர் பிராமண சமூகத்தை [அ]வமானத் தாக்கியதாக பிரா[மண] சேவா சங்கம் கண்டித்திருப்[பதா]கவும், ஷை சங்க காரியதரிசி [முத]ல் மந்திரியிடம் இதுபற்றி புகார் [செய்]திருப்பதாகவும்—அதில் இந்தி யன்பினல் கோர்ட்படி கருஞ் சட்டைப்படை நடத்தை குற்றமாகுமென்றும், 25 வருட காலத்துக்குமேல் பிராமணர்கள் பொறுத்துவந்ததாகவும், இனிப் பொறுக்க முடியாதென்றும், குறிப்பிட்டிருக்கிறதாகவும், 15ந் தேதி தினமணி எழுதுகிறது. இதிலிருந்து மதுரைக் கலவரத்துக்கு பார்ப்பன தூண்டுகோல் எவ்வளவு இருக்கும் என்பதையும், தேர்மூர் வைத்தியநாதய்யர் பணம் கொடுத்து கலவரத்தை கிளப்பிவிட்டார் என்பதில் உண்மை இல்லாமலிருக்குமா என்பதையும் திராவிடர்கள் சிந்திப்பார்களாக.

## தோழர் திராவிடமணி

'விடுதலை'ப் பத்திரிகை தொடக்க அலுவல்களைக் கவனிக்க 16-5-46 முதல் சென்னைசென்று இருப்பதால் திராவிடர் கழக அங்கத்தினர் சேமிப்பு தகவல் தவிர பிறவற்றிற்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுமாறு தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆ. திராவிடமணி, No 2. பாலகிருஷ்ணபிள்ளை தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## அறிவிப்பு

மதுரை மாநாட்டில் தங்கியிருந்த இடத்தில் ஏதாவது சாமான்களை விட்டுச்சென்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

கே. எஸ். ராசமாணன்,
32, மாயாண்டிபிள்ளை சந்து,
ராமநாதபுரம் ரோடு, மதுரை.

---

ஜின்னாப், பட்டத்து ராஜபாக்ஷ்ஞருக்கும் ராஷ்டிரபதியாக ஆகிவிடுவார் என்பதில் ஐயமில்லை.

தவிரவும் காங்கரஸ் இன்று ஒரு இந்து தலைவரை கொள்ள வேண்டுமானால் பார்ப்பனர் தவிர வேறு ஒருவருக்கு பட்டம் சூட்ட எப்படி சம்மதிக்க முடியும். ஆகலால் தலைக்கேற்ற குல்லாவாகவும், குல்லாவுக்கு ஏற்ற தலையாகவும் அமைந்து இருக்கிறது.

தவிரவும் ஸ்தாபனங்களுக்கு வேஷதாரிகள்தான் தேவையே தவிர புத்திசாலிகள் தேவை இல்லாததால் இத்தேர்தல் மிகவும் பொருத்தமானதேயாகும்.

## பெரியார் ஈ. வெ. ரா.

மே 11, 12ந் தேதிகளில் மதுரை கருப்புச்சட்டைப்படை மாநாட்டில் கலந்துகொண்டு 13ந்தேதி ஈரோடு வந்தார். 15ந்தேதி இரவு புறப்பட்டு திருச்சி சென்று 16உ தாத்தையங்கார் பேட்டைக்கும், 17உ திருக்காட்டுப்பள்ளி திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்திற்கும் சென்றுவிட்டு 18, 19 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெறும் தஞ்சைமாவட்ட மாநாடுகளில் கலந்துகொள்வார்.

20-5-46 ஈரோடு
21— ஏற்காடு
1-6-46 திருவண்ணாமலை
2— சென்னை

மற்றவை கேள்வில்

## "விடுதலை"

ஜுன் 1ந் தேதி முதல் தொடங்கும். மாத சந்தா ரூ. 1. 6 மாதம் ரூ. 6. ஆண்டுசந்தா ரூ. 12. கிடைத்துள்ள கோட்டா பேப்பரைக்கொண்டு கொஞ்சம் பிரதிகளே வெளியிடப்படுவதால் தோழர்கள் உடனே சந்தாதொகை யனுப்பி பதிவுசெய்துகொள்ள வேண்டியது.

மானேஜர் "விடுதலை"
No. 2, பாலகிருஷ்ணபிள்ளைதெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## கறுப்புச்சட்டைப்படை

கருப்புச்சட்டை மனு பாரங்களை வைத்துள்ளோர் ஒரு வாரத்திற்குள் பூர்த்திசெய்து அனுப்பி வைக்க வேண்டுகிறேன்,

ஆ. திராவிடமணி.

## மேற்கு சென்னை திராவிடர் மாநாடு

26-5-46 ஞாயிறு காலை 8மணிக்கு பெரம்பூர் சரஸ்வதி டாக்கீஸ் எதிரிலுள்ள தாசா மக்கான் மைதானத்தில் மாநாடு நடைபெறும்.

தலைவர்:- தோழர் கே. அன்பழகன் எம். ஏ., திறப்பாளர்:- தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., கொடியேற்றுபவர்:- தோழர் சி. தங்கராஜ். படத்திறப்பு:- தோழர் சே. குப்புசாமி.

ஊர்வலம்: மாலை 3மணிசகு கீழ் பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் அருகிலுள்ள ஸ்பர்டாங்க் ஏரியிலிருந்து புறப்பட்டு, குலாம் காதர்ஸ்மித்கர் மைதானத்தில் முடிவுறும்.

பொதுக்கூட்டம்:- மாலை 5-30 மணிக்குச் சரியாய் காண்ரன்ஸ்மித் மைதானத்தில் தோழர் சி. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டிலும், பொதுக்கூட்டத்திலும், பெரியார், தளபதி அண்ணாதுரை பேசுவர்.

அனைவரும் தவறாது கறுப்புச் சட்டை அணிந்து வரும்படி வேண்டுகிறோம்.

கட்டணம் அணா 4

என் எஸ் தங்கரூபன், வ க தலைவர்
எஸ் டி எம் பழனிச்சாமி
ஆர் கே முனுசாமி செயலாளர்கள்

## திராவிடர் கழக நிதி

நிதி சேர்த்தலைப்பற்றி பல தோழர்கள் எழுதி விவரம் கேட்ட வண்ணமுள்ளனர். நிதி டிக்கட்டுகள் பெரும்பாலும் அச்சாகிவிட்டன. விரைவில் நிர்வாகக்கமிட்டி கூடும்பொழுது ஜில்லாதோறும் பிரித்து அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

என். அர்ச்சுனன்,
தலைவர், நிதிக்கமிட்டி.

## தேவை

சென்னையில் ஜுன் முதல்வாரத்தில் தொடங்கப்போகும் விடுதலைப் பத்திரிகை ஆபீசுக்கு மானேஜர், காஷியர், அக்கவுண்டண்ட் குமாஸ்தா தேவைப்படுவதால் இயக்க உணர்ச்சியும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 28-5-46க்குள் காலை 11மணி முதல் 1மணி வரையில் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்து தோழர் ஆ. திராவிடமணியைக் காணவும்.

No. 2, பாலகிருஷ்ணபிள்ளைத்தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## தென் ஆற்காடு மாவட்ட திராவிட மாணவர் மாநாடு

30-5-46 வியாழனன்று கல்லக்குறிச்சியில் நடைபெறும்.

தலைவர்:- பெரியார் ஈ. வெ. ரா. திறப்பாளர்:- இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., கொடியேற்றுபவர்:- எ. பி. சனார்த்தனம் எம். ஏ.,

மற்றும் ஆ. திராவிடமணி பி. ஏ., இரா. இளம்வழுதி, அன்பழகன் எம். ஏ., தவமணிராசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இயக்கத்தோழர்கள் கூடுமானவரை கறுப்புச்சட்டை அணிந்து வரவேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்.

## வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் தோழர் ஆர். வெங்கடராமன் அறிவிப்பது

மதுரை கருஞ்சட்டைப்படை மாநாட்டின் இரண்டாவதுநாள் 12-5-46 அன்று பகல் 12மணிக்கு நானும் எனது ஊர் தோழர்களும் வெடி வாய்க்காலிலிருந்து புறப்பட்டு கோரிப்பாளையம் சிடி பஸ் நிற்குமிடத்திற்கு வந்தபொழுது கலகக்காரர்களின் பெரிய கும்பல் ஒன்று எங்களை மறித்துக்கொண்டதோடு திட்டியும் அடித்தும் எங்களுடைய பைகளை சோதனைசெய்தும், அன்பழகி எனது சட்டையிலிருந்த மணிபர்சை எடுத்துக்கொண்டனர். எனது மணிபர்சில் நூறு ரூபாய் காசு ஒன்றும், மூன்று ரூபாய்களும் சில்லறையும் இருந்தன. பாதுகாப்புக்காக என்னிலிருந்த ஒரு தோழர் ஓடி தனது கையை ஆரியபவனப் ஒன்றில் வைக்க, அவன் அதைத்தூக்கி கலகக்காரர்களிடம் எறிந்துவிட்டான். ஊருக்குத் திரும்புவதற்கு கையில் பணமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டோம். இம்மாதிரி காலித்தனமான கொடுஞ்செயல்களை பொதுமக்களின் ஆத்திரச் செயல் என்று தேசியப்பத்திரிகைகள் பித்தலாட்டம் செய்வது ஆச்சரியமாகயிருக்கிறது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கு தாக்கி அவர்களிடமிருந்த கறுப்புச் சட்டை, பணம் முதலியவற்றைக் கொள்ளையடித்ததோடும் இல்லாமல் அநேக இடங்களில் திராவிடர் கழகக் கொடிகளை இறக்கிக்கொளுத்தினர். மாநாட்டுப் பந்தலை நெருங்குவதற்கு முன்பே தனியாக போடப்பட்டிருந்த சாப்பாட்டுப்பந்தல், கடைப்பந்தல் இவைகளையெல்லாம் கொளுத்தினர். போலீசின் கண்முன்பே இத்தனைய நாசவேலை நடைபெற்றது. போலீஸ், ரிசர்வ்படை இவ்வளவும் இருந்துகொண்டே முதலில் ஆற்றங்கரைமீதிருந்த காலிகளை வரவர மாநாட்டுப் பந்தலுக்கு அருகே வரும்படி செய்துவிட்டனர். தாங்கள் பார்த்துக் கொள்வதாகக்கூறி, பந்தலுக்குக் காவலாக இருந்த தொண்டர்களையும் போலிஸ்காரர்கள் அனுப்பிவிட்டனர். தொண்டர்கள் வெளியேறியதால் நிமிஷ நேரத்திலெல்லாம் பெரிய பந்தலுக்கும் நெருப்பு வைக்கப்பட்டது. போலீசார் அதையும் தடுக்கமுடியவில்லை.

இறுதியாக எஞ்சிநின்ற இடம் தலைவர்களும், தொண்டர்களும் இருந்த மாநாட்டுப்பந்தலுக்கருகிலிருந்த பங்களா தான். அங்கும் காலிகள் நெருங்க ஆரம்பித்தனர். காலிகளை எதிர்த்து தாக்காதிருக்கும்படி முன்போலவே போலீஸ் அதிகாரிகள் கறுப்புச்சட்டைத் தொண்டர்களைக் கேட்டுக்கொண்ட போதிலும் தொண்டர்கள் இம்முறை எதிர்த்துத்தாக்குவதே என துடித்துக்கொண்டிருந்தனர். இங்கும் பெரியார், தொண்டர்களை அமைதியாக இருக்கவேண்டுமென்றும், போலீஸ் அதிகாரிகள் இஷ்டம்போலவே காரியம் நடக்கட்டும் என்றும் சொல்லிவிடவே தொண்டர்கள் கொதிப்பை அடக்கிக் கொண்டு எதற்கும் தயாராக இருந்தனர். மாலை 7மணி வரையில் காலிகள் தொல்லை இருந்துகொண்டே இருந்தது. போலீசார் பலமுறை சுட்டும் காலிகளை துரத்திக்கொண்டிருந்தனர். D. I. G, D. S. P., டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட், சிடி மாஜிஸ்ட்ரேட் முதலிய அதிகாரிகள். பெரியாரிடம் வந்து தொண்டர்களையும், பிறரையும் அவரவர்கள் ஊருக்கு அனுப்புவதுபற்றிக் கலந்தாலோசித்துவிட்டு, இரவு 7மணி முதல் ஊரடங்குச் சட்டமும், 144 தடையுத்திரவும் போடப்பட்டிருப்பதாகவும் கூறிச் சென்றனர். 7-30மணிமுதல் பஸ்களில் பங்களாவிடமிருந்த அவ்வளவு பேரையும் வெளி ஸ்டேஷன்களுக்கு போலீஸ் ஏற்பாட்டின்படியே கொண்டுபோய்ச் சேர்த்தனர். டவுனுக்குள் போலீசார் அடைத்து வைத்திருந்த சுமார் 120தொண்டர்களையும் மறுநாள் பகல் 12மணிக்குதான் கொண்டுவந்து விட்டதாகத் தெரிகிறது.

கறுப்புச்சட்டைப் படையினரை ஏற்றிச்சென்ற பஸ்களை எல்லாம் கல்லாலடித்திருக்கின்றனர்.

வெளியூர்களிலிருந்து வந்த பலர் காலிகளால் கொள்ளையடிக்கப்பட்டதால் பிரயாணச்செலவுக்குகூட பணம் இல்லாது அல்லலுற்றனர்.

ஆரம்பமுதல் கடைசிவரையில் இக்கலவரத்திலும், காலித்தனமான பலாத்காரச் செயல்களிலும், பொதுஜனங்களோ சிறிதாவது நாணயமுள்ளவர்களோ ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. படிபட்ட இரண்டொரு காலிகளை விசாரித்தபொழுது தங்களுக்கு கூலிகொடுத்தவர்களையும், ஏவிவிட்டவர்களையும் கூடச் சொன்னதாகத் தெரிகிறது. காலிகள் பந்தலைக் கொளுத்தியபொழுதும், கொடிகளைக் கொளுத்தியபொழுதும் வந்தேமாதரம் காந்திகி ஜே எனக் கூச்சலிட்டு தம்மை ஏவிவிட்டவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். தோழர் வைத்தியநாத ஐயரைக் கண்டவுடன் அவர் காலில் விழுந்து மரியாதை செய்து "இராமமாக நடத்திவிட்டோம்" என்பதைக் காட்டிக்கொண்டது போலிருந்தது.

மதுரைச் சம்பவத்தைக் கண்ணுற்ற ஒவ்வொருவருக்கும் எவ்வளவு முன் னேற்பாட்டோடும், எவ்வளவு கூலி கொடுத்தும் காலித்தனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பது விளங்காமற் போகாது.

# மாணவர் சுற்றுப்பிரயாணம்

## தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: இறைவன் வீரமணி, புலவர் ஆறுமுகம், ஈரோடு சுப்பையன், தில்லை வில்லாளன் ஆகியோர்.

| | |
|---|---|
| 20-5-46 | பாபநாசம் |
| 21— | கிவளூர் |
| 22— | சிக்கல் |
| 23— | மஞ்சக்கொல்லை |
| 24— | ஓய்வு |
| 25— | நாகூர் |
| 26— | வெங்கடங்கால் |
| 27— | திருமருகல் |
| 28— | ஓய்வு (நாகூர்) |
| 29— | காரைப்பிடாகை |
| 30— | திருத்துறைப்பூண்டி |
| 31— | காலை கொக்காலடி<br>மாலை ஆலத்தம்பாடி. |

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன்.

வி. எஸ். பி. யாகூப்,
C/o கோவிந்தராஜ திராவிட கழகம்,
நாகூர்.

☆

## சென்னை—செங்கற்பட்டு

தோழர்கள் கி. தியாகராசன், எஸ். அப்பாவு ஆகியோர்.

| | |
|---|---|
| 20— | பொன்னேரி |
| 21— | திருவள்ளூர் |

முழு விவரங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பேட், சென்னை.

☆

## திருச்சி மாவட்டம் இரண்டாம் பகுதி

பூவாளூர் தோழர் கு. நல்லதம்பி அவர்கள் பொறுப்பில் தோழர்கள் எஸ். செல்வராசு, ஆ. முத்துவேலுஞ்செழியன் ஆகியோர்.

| | |
|---|---|
| 20— | திண்ணியம் |
| 21— | ஆங்கரை |
| 22— | அரங்கலூர் |
| 23— | கீழ்மாரிமங்கலம் |
| 24— | மகிழம்பாடி |
| 25— | படூர் உத்தமனூர் |
| 26— | ரெத்தினங்குடி |
| 27— | நகர் |
| 28— | இடையாற்று மங்கலம் |
| 29— | பச்சாம்பேட்டை |

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இதழில்.

☆

## தென்னாற்காடு மாவட்டம்

தோழர்கள் மதுரை இராமானுச புலவர் மாணிக்கம், சி. இளவழக ஆகியோர்.

| | |
|---|---|
| 20-5-46 | வல்லம்படுகை, சாலி தோப்பு |
| 21— | நாம்புத்தூர் |
| 22— | வெள்ளூர், புளியங்குடி |
| 23— | ஸ்ரீமாட்சி |
| 24— | லால்பேட்டை |
| 25— | கந்தகுமாரம் |

சிதம்பரம் கூட்டத்தில் தோழர் அன்பழகனும் மற்றும் பல முக்கிய கூட்டங்களில் காஞ்சி கலியாணசுந்தரனாரும் கலந்துகொள்வார்கள்.

## அறிவிப்பு

திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் தோழர் அரங்கண்ணலிடமிருந்து இரசீது புத்தகங்கள் பெற்றுச்சென்றவர்கள் உடனே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அரங்கண்ணல்,
C/o குடி அரசு, ஈரோடு.

## "தொழிலாளர் மித்திரன்"

எதிர்பார்த்தபடி தாள் கிடைக்கப் பெறாததால் 18-5-46ல் 'மித்திரன்' வெளிவராது. 25-5-46ல் தவறாமல், மதுரை மலராக' மித்திரன் வெளிவருவான்.

மானேஜர்,
தொழிலாளர் மித்திரன், பாண்டிச்சேரி.

## ஈரோடு சண்முகம் மறைவுக்கு அனுதாபம்

1-5-46 மாலை 7½ மணிக்கு ஈரோடு கோவை மாவட்ட திராவிடர் கழக நிலையத்தில் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகக்கூட்டத்தில் ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் தோழர் எ. சண்முகம் அவர்கள் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர்கள் பி. சண்முகவேலாயுதம், நாத்திக சுப்ரமணியம் ஆகியோர் அன்னார் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

டாக்டர் வெற்றியின்
மதனா பில்ஸ்
☆
தாதுபுஷ்டிக்கு உயர்ந்த மருந்து
இதை வெல்ல வேறில்லை.
2 மாத்திரை ரூ. 1.
1-4-0 ரூபாய் மணியார்டர் அனுப்பினால் அனுப்புகிறோம். ஏஜண்டுகள் தேவை.
வெற்றிவேல் பார்மஸி,
நாங்குனேரி P. O.

Edited, Printed and Published by N. Kariyaradaswamy at the Tamilan Press 62, Cutchery street, ERODE.